# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி - செய்திமடல்
# Jaffna National College of Education - News letter




## குருதீபம்
## Gurutheepam

நவம்பர் - 2021 இதழ் - 31




## பீடாதிபதியின் செய்தி

குருதீபம் இதழ் - 31 இற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மாதம் குருதீபம் சில தினங்கள் பிந்தி வந்தாலும் தொடர்ந்து எமது முயற்சிகள் தடையின்றி நடந்து கொண்டேயிருப்பதில் மிக்க மகிழ்ச்சி. கடந்த 30.10.2021 ஆம் திகதி CARE FOR EDUCATION, USA வருடாந்த நிகழ்வில் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை இங்கு பதிவிடலாம் என எண்ணுகின்றேன்.

கல்வி நிலையில் ஏற்படும் வீழ்ச்சி சமூகத்தில் பாரிய விரும்பத் தகாத விளைவுகளை ஏற்படுத்தும். அதற்கு தமிழர் பகுதியும் விதி விலக்கல்ல. எமது கல்விக்கும் தொழில் வாய்ப்பிற்கும் உள்ள இடைவெளி, கல்விக்கும் பொருளாதாரத்திற்கும் உள்ள இடைவெளி போன்றவை இப்பிரச்சினைகளுக்கு அடிப்படையாக இருக்கின்றன.


இவற்றை சீர் செய்வதற்கு, எமது மனப்பாங்கு மாற்றம் இன்றியமையாதது. அதாவது சில பொருளாதார நலன் தரும் தொழில்களுக்கு உரிய கௌரவம் வழங்கப்படாமையால் அது கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றது.

புலம் பெயர் நண்பர்கள், நம்மவர்களின் தின வறுமையைப் போக்குவதற்காக கடுமையாக உதவி செய்கின்றார்கள். ஆனால் அது எந்த வகையில் நிரந்தரமான மாற்றத்தை உருவாக்கும் என்பது புரியவில்லை.

அன்றைய தினத்தினை மட்டும் மக்களைச் சிந்திக்க வைக்கின்ற அரசியல் தலைவர்களைத் தான் உள்நாட்டிலும் நாம் கொண்டிருக்கின்றோம். கடைசி ஓர் ஐந்தாண்டுகளுக்குத் தன்னும் திட்டமிடும் ஆற்றல் இல்லாத, பொது நோக்கற்ற, சிந்தனையற்ற தலைமைகளை கொண்டிருக்கின்றோமா? என்ற வினா எழுகின்றது. இந்த அரசியல் இடைவெளி நிரப்பப்பட வேண்டும்.


தொடர்ச்சி 2ம் பக்கத்தில்...

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சார்பில் மணிவிழா வாழ்த்துக்கள்! - 28.10.2021




**Mr.E.M.S.Ekanayake, Chief Commissioner**

## கல்வி மீட்சிக்காக உயிர்ப்புடன் செயற்படும் அனைத்து ஆசிரியர்களுக்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சர்வதேச ஆசிரியர் தின வாழ்த்துக்கள்!




## "வாழ்வகம்"ரவீந்திரனுக்கு யாழ் விருது!



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதுநிலை விரிவுரையாளர் திரு.ஆ.ரவீந்திரன் அவர்கள் யாழ் மாநகர சபையினால் வழங்கப்படும் யாழ் விருதினை இந்த ஆண்டு பெற்றுக் கொள்கின்றார். அவருக்கு எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தின் சார்பில் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd November 2021

***போசகர்***

திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்
பீடாதிபதி

***ஆலோசகர்கள்***

செல்வி.செ.செல்வமலர்
திரு.தி.ஜெயகாண்டீபன்
திருமதி.செ.சிவபாதம்

உப பீடாதிபதிகள்

***பிரதம ஆசிரியர்***

திரு.ம.நிரேஸ்குமார்

***இணை ஆசிரியர்கள்***

திரு.சி.முகுந்தன்

திருமதி.ஜெ.உதயகுமார்

திருமதி.ஞா.கணேசநாதன்

திருமதி.சு.விக்னமோகன்

திரு.ப.இராஜேஸ்வரன்

திரு.பொ.விஜயகுமாரன்

கலாநிதி.எஸ்.பத்மராசா

திரு.அ.லோகநாதன்

திரு.து.இளங்குமரன்



***வெளியீடு***

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.
021 223 0036
Jaffnancoe@hotmail.com
www.jaffnancoe.lk


## பீடாதிபதியின் செய்தி தொடர்ச்சி...

கடல் வளத்தினை அந்நியர் அள்ளிச் செல்லவும், விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு கையேந்தவும், தென்னிந்திய திரைப்படங்களின் தாக்கமும் இன்று முன்னேற்றத்திற்கு தடையாக அமைவதைக் காணலாம். இவை யாவும் தங்கியிருக்கும் சமுதாயக் கட்டமைப்பை தக்கவைக்கும் செயற்பாடுகளாகவே நான் கருதுகின்றேன்.

பால்மாவிற்கான தட்டுப்பாடு ஏற்பட்ட போதுதான் எமது கிராமத்துப் பால் மாடுகள் பற்றிய சிந்தனை மனதை உலுப்பியது. உள்ளியும், மஞ்சளும் உள்ளூரில் விளையும் என்பதுவும், குழை வண்டில் மூலம் சேதனப் பசளை பயன்படுத்தியமையும் இன்னமும் தான் எமது சிந்தனைக்கு எட்டப்படவில்லை.

மாற்றுச் சிந்தனைகள் உலகளாவிய ரீதியில் வலுப் பெற்ற காலத்திலும் உலகமயமாதலின் விளைவாக இலத்திரனியல் யுகத்தினுள் நாம் வேகமாகப் புகுந்தோமே அல்லாது, அவற்றினை - மாற்றுச் சிந்தனைகளை - நாம் இன்னமும் நம் வாழ்வியில் பொருத்தி வாழவில்லை.

சுய ஆற்றலுடையோர் குடும்பங்களில் அவர்களின் தொழில் முயற்சிகளின் விருத்திக்குரிய நிபுணத்துவ ஆலோசனைகளையும் தேவையான இடத்து தொழிநுட்ப வசதிகளையும் பொருத்தமான சந்தை வாய்ப்புகளையும் வழங்குதல் அவசியமாகின்றது.

இங்கு பிரதான விடயம் கிராம மட்டக் குழுவூடான செயற்பாடும், புலம் பெயர் அமைப்புகளில் ஒரு முகப்பட்ட வழியொன்றினூடான உதவிகள் வழங்கப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும். பல தசாப்தங்களிற்கு முன் யோகர் சுவாமிகள் அரசியல் தொடர்பாக கூறிய வேட்டிக் கதையை நினைவு படுத்தலாம். தமிழன் வேட்டியைக் கிழித்துக் கட்டத் தொடங்கிவிட்டான் என ஒற்றுமையின்மை பற்றி குறிப்பிட்டிருந்தார்.

ஆளாளுக்கு தனித்து செயற்பட்டால் மீண்டும் எமது உள்நாட்டு அரசியல் கலாசாரத்திற்கு உட்பட்டு வெறுமனே பிழையான அரசியல் லாபம் கருதிய செயற்பாடாக மாறி பொருத்தமான பங்கீடின்றி தங்கி வாழ்வோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பதே இதன் விளைவாக அமையலாம்.

எனவே கல்விப்புலம் சார்ந்தோரே இவைபற்றியும் சிந்திப்போம்...

**பீடாதிபதி**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**கோப்பாய்.**

**சர்வதேச ஆசிரியர் தினம் - 2021**



## சர்வதேச ஆசிரியர் தினத்தில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவ ஆசிரியர்கள் நாட்டின் பல பகுதிகளிலும் மரங்களை நாட்டினர்...






**HAPPY TEACHERS' DAY**





























## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வாணி விழா - 15.10.2021









## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வாணி விழாவில் ஏடு தொடக்கல் - 15.10.2021



## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பௌர்ணமி விழா - 20.10.2021




## தன்னகரில்லா சேவையில் எமது கல்லூரியின் பணியாளர்கள்





யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதி (தொடருறு கல்வி) திருமதி.செல்வமலர் சிவபாதம் அவர்களின் மணிவிழாவில் சில பதிவுகள்...



















**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணயோகன் அவர்களின் மணிவிழாவில் சில பதிவுகள்...**













